**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 19/2021 |
| Name | : Murugan |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.06.2017 ம் வருடம் சுமார் 11.30 மணியளவில் நானும் அப்போது காவலராக இருந்த நாராயணசாமி என்பவரும் கொமரலிங்கம், சாமராயப்பட்டி, பெருமாள் புதுார் ஆகிய இடங்களில் ரோந்து சென்று பாப்பான்குளம் கூட்டுறவு சொசைட்டியில் தணிக்கை செய்து அங்கு உயர்நிலைப் பள்ளியை ஒட்டி நின்றிருந்தவரை விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக பதில் சொல்ல பின்பு மணிவாசகம் என்று சொன்னார். என்னுடன் இருந்த நாராயணசாமி 30 அடி துாரத்தில் Explosive என ஒரு பாக்ஸ் இருந்ததை பார்த்து யாருடைய என்று கேட்க சரிவர பதில் சொல்லாததால் மணிவாசகத்தை அவ்விடத்திற்கு சென்று பார்க்கையில் மேலும் 5 Explosive பாக்ஸ்கள் இருந்தது பின்பு மணிவாசகத்திடம் பூமி யாருடையது என்று கேட்க எனது அப்பா சின்னப்பன் என்பவரின் விவசாய பூமி என சொன்னார். அந்த Explosive பாக்ஸில் Detonator குச்சிகளும் இருந்தது. பின்பு மணிவாசகம் அந்த விவசாய பூமி தன்னுடையது என்றும் வெடி பொருட்களை பயன்படுத்துவதற்காக வைத்திருப்பதாக கூறினார். பின்பு நாராயணசாமி என்னை அங்கே

விட்டுவிட்டு கொமரலிங்கம் காவல் நிலையம் வந்து தனியறிக்கையாக புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்